சுருக்கம்

பணியமைப்பு – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – உதவி பொறியாளர்கள் திரு.எஸ்.கண்ணன் மற்றும் திரு.ஜி.குமரேசன், ஆகியோருக்கு– உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கி பணிநியமனம் வழங்கப்பட்டதற்கு அரசு உறுதியாக்கம் அளித்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந.5) துறை

அரசாணை (ப) எண். 43 நாள் 3.02.2010

(திருவள்ளுவராண்டு 2041 தை மாதம்–21 ம் நாள்)

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம் ந.க.எண்.46211/2009/எப்.4 நாள் 20–10–2009 மற்றும் 08–12–2009.

---

ஆணை:

நகராட்சி நிர்வாக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், மாநகராட்சி பணிவிதிகளின்படி, செயற்பொறியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்படும் உதவிப் பொறியாளர்/இளநிலை பொறியாளர் மைய அலுவலக பொறியியல் பிரிவில் ஓராண்டுக்கு குறையாமலும் வார்டு அலுவலகங்களில் மூன்றாண்டுகளுக்கு குறையாமலும் பணிபுரிந்திருக்க வேண்டும். ஆனால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அரசு ஆணை எண்.138, நாள் 27–05–1997ன்படி பொறியியல் பிரிவுக்கு மொத்தம் அனுமதிக்கப்பட்டுள்ள உதவிப் பொறியாளர்/ இளநிலைப் பொறியாளர் நிலையிலான பணியிடங்களின் எண்ணிக்கை 20 அவற்றுள் 3 வார்டுகளுக்கு ஒரு உதவிப்பொறியாளர் அல்லது ஒரு இளநிலைப் பொறியாளர் என்ற அடிப்படையிலேயே பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்றும், மாநகராட்சி மைய அலுவலகத்திற்கென பிரத்யேகமாக உதவிப் பொறியாளர்/ இளநிலைப் பொறியாளர் நிலையில் பணியிடம் அனுமதிக்கப்படவில்லை என்றும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பணியாற்றும் கீழ்க்காணும் இளநிலை பொறியாளர்/ உதவி பொறியாளர்களை மாமன்றத் தீர்மானம் எண்.313 நாள் 29–12–2008ல் அனுமதித்தவாறு உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) ஆக ரூ.8000–275–13500 என்ற ஊதிய ஏற்ற முறையில் பதவி உயர்வு செய்தமைக்கு உறுதியாக்கம் செய்யக் கோரும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் செயற்குறிப்பினை அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

| இளநிலை பொறியாளர்/ உதவி பொறியாளர் முதுநிலை பட்டியலில் வரிசை எண். | பெயர் | பதவி | மாமன்றத் தீர்மானம் (ம) நாள் | மாநகராட்சி ஆணையர் செ.மு.க.எண். (ம) நாள் | உதவி செயற் பொறியாளர் (ம) பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு. S.கண்ணன் | இளநிலை பொறியாளர் | 313/ 29-12-2008 | சி1/மையம்/ 10870/07 நாள் 27-01-2009 | 28-01-2009. முற்பகல் |
| 2 | திரு. ஜி.குமரேசன் | உதவி பொறியாளர் | 313/ 29-12-2008 | சி1/மையம்/ 10870/07 நாள் 27-01-2009 | 28-01-2009 முற்பகல் |

2. இளநிலை பொறியாளர்/ உதவி பொறியாளர் முதுநிலை பட்டியலில் வரிசை எண். 2 மற்றும் 3-ல் இடம்பெற்றுள்ள பணியில் மூத்தவர்களான திரு.எஸ்.கண்ணன் மற்றும் ஜி.குமரேசன் ஆகியோர் 18 வருடம் அனுபவம் பெற்றுள்ளதாலும், பொறியாளர் பிரிவில் பல்வேறு பிரிவுகளில் போதிய அனுபவம் பெற்றுள்ளதாலும் அவர்களுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று (தீர்மானம் எண்.313 நாள் 29-12-2008) உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு செய்யப்பட்டு பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும்,அவர்கள் அப்பதவியில் சேர்ந்து 28-01-2009 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகின்றார் என்றும், நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மேற்கான் இரு உதவி செயற்பொறியாளர்கள் (மின்சாரம்) மீது ஒழுங்கு நடவடிக்கை கோப்பு ஏதும் நிலுவையில் இல்லை எனவும் கடந்த ஐந்தாண்டுகளில் விதி 8(2)-ன் கீழ் தண்டனைகள் ஏதும் பெறவில்லை எனவும் தெரிவித்து, கடந்த ஐந்தாண்டுகளுக்கான மந்தன அறிக்கைகளையும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரிடமிருந்து பெற்று அனுப்பியுள்ளார்.

தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் பணி விதிகளின்படி உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) பணியிடம் வகுப்பு II பணியிடம் என்பதால் நியமன அதிகாரம் மாமன்றத்திற்கும், உறுதியாக்கம் பெற அரசின் அனுமதியும் பெறப்பட வேண்டும்.

3. எனவே, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாமன்றம் ஒப்புதலளித்தவாறு, திரு.எஸ்.கண்ணன் மற்றும் திரு.ஜி.குமரேசன் ஆகியோருக்கு உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) என ரூ.8000-295-13500 என்ற ஊதிய ஏற்றமுறையில் பதவி உயர்வின் மூலம் பணிநியமனம் வழங்கியுள்ளதற்கு அரசின் உறுதியாக்கம் வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக பணி விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படி மைய அலுவலகத்தில் ஒருவருடம் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு விலக்களிக்கலாம் என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி பொறியாளர்கள் திரு.எஸ்.கண்ணன் மற்றும் திரு.ஜி.குமரேசன் ஆகிய இருவருக்கு 28-01-2009 முற்பகல் முதல் பதவி உயர்வின் மூலம் உதவி செயற்பொறியாளராக பணிநியமனம் வழங்கியுள்ளதற்கு, உறுதியாக்கம் செய்து அரசு ஆணையிடுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

நிரஞ்சன்மார்டி,
அரசுச்செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5.
ஆணையாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

நகல்
திரு.எஸ்.கண்ணன்,உதவி செயற்பொறியாளர்.
திரு.ஜி.குமரேசன்,உதவி செயற்பொறியாளர்.
( திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் வழியாக)
திருச்சிராப்பள்ளி.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
குறளகம், சென்னை-108.
உதவி இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி.
மாண்புமிகு துணை முதலமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர். சென்னை-9.
செயலரின் தனிச்செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை-9.
இ.கோ/உநகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 5/2